# வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

## மானியக் கோரிக்கை எண். 26

## அறிவிப்புகள்
## 2019 – 2020

ஓ. பன்னீர்செல்வம்
துணை முதலமைச்சர்

# தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

## 1. சென்னை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களில் சுயநிதி திட்டத்தின் கீழ் 1,253 குடியிருப்பு அலகுகள் ரூ. 349 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

மக்களின் வீட்டுவசதித் தேவையினை நிறைவேற்றும் பொருட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சோழிங்கநல்லூர், நொளம்பூர், கொரட்டூர், ஜாபர்கான்பேட்டை, பரனூர், ஒசூர் பகுதி–19, திருப்பூர் முதலிபாளையம், கோயம்புத்தூர் சிங்காநல்லூர் மற்றும் புதுக்கோட்டை பகுதி–I ஆகிய இடங்களில் சுயநிதி திட்டத்தின் கீழ், 1,253 குடியிருப்பு அலகுகள் ரூ. 349 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 2. காஞ்சிபுரம் மற்றும் மதுரை மாவட்டங்களில், 1,148 மனைகள் ரூ.48.21 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் உருவாக்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு அருகேயுள்ள பரனூர் மற்றும் மதுரை மாவட்டத்தில் கூடல் புதூர், தோப்பூர்–உச்சப்பட்டி ஆகிய இடங்களில் **1,148** மனைகள் ரூ. **48.21** கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்படும்.

**3. சென்னை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள பயன்படுத்தத் தகுதியற்ற வாரியக் கட்டடங்களை இடித்து விட்டு, 303 குடியிருப்பு அலகுகள் மற்றும் வணிக / அலுவலக வளாகங்கள் ரூ.150.68 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தில் பயன்படுத்த தகுதியற்ற வாரிய வணிக வளாகங்கள் மற்றும் வாரிய வாடகைக் குடியிருப்புகள் ஆகியவற்றை இடித்துவிட்டு அதிக தரைப்பரப்புக் குறியீட்டில் மறுகட்டுமானம் செய்ய உத்தேசித்து **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சென்னையில் உள்ள கே.கே. நகர், திருவான்மியூர், நந்தனம் விரிவாக்கம், அண்ணாநகரில் உள்ள 3வது நிழற்சாலை, சிந்தாமணி வணிக வளாகம், 12வது பிரதான சாலை மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் வாரியத்தின் நிதியினைக் கொண்டு 303 குடியிருப்பு அலகுகள் மற்றும் வணிக /அலுவலக வளாகங்கள் ரூ.150.68 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 4. கோயம்புத்தூரில் வணிக மற்றும் அலுவலக வளாகம் ரூ.9.10 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** கோயம்புத்தூர் கணபதி பகுதியில் வணிக மற்றும் அலுவலக **வளாகம்** ரூ.9.10 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

## 5. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் இயங்கி வரும் 7 கோட்டங்களுக்கான அலுவலக கட்டடங்கள் ரூ.94.84 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் இயங்கி வரும் 7 கோட்ட அலுவலகங்களுக்கான சொந்த கட்டடம் கட்ட ஏதுவாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** வேலூர், ஒசூர், தோப்பூர்–உச்சப்பட்டி துணைக்கோள் நகரம், திருநெல்வேலி, திருச்சி, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய 7 கோட்ட அலுவலக கட்டடங்கள் ரூ.94.84 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 6. மதுரை மாவட்டம், தோப்பூர்–உச்சப்பட்டியில் விருந்தினர் மாளிகை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** மதுரை மாவட்டத்தில் அமைக்கப்பட்டுவரும் தோப்பூர்–உச்சப்பட்டி துணைக்கோள் நகரத்தில் **5,000** சதுர அடி நிலப்பரப்பில் **4,800** சதுர கட்டட பரப்பளவு கொண்ட 9 அறைகளுடன் கூடிய விருந்தினர் மாளிகை ரூ.2.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 7. நீலகிரி மாவட்டம், கூடலூரில் உள்ள தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளின் மறுகட்டுமானம் ரூ.13 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** நீலகிரி மாவட்டம், கூடலூரில் உள்ள பயன்படுத்த தகுதியற்ற 60 தமிழ்நாடு அரசு ஊழியர் வாடகைக் குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகளுக்கான மறுகட்டுமானம் ரூ.13 கோடி மதிப்பீட்டில் அரசு நிதியினைப் பெற்று கட்டப்படும்.

## 8. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் கீழ் இயங்கும் 14 கோட்ட அலுவலகங்களுக்கு புதிய வாகனங்கள் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் வாங்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** கே.கே.நகர், தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டு கிராமம், பட்டினப்பாக்கம், சிறப்புத் திட்டக் கோட்டம்-I, மதுரை, தோப்பூர்–உச்சப்பட்டி துணைக்கோள் நகரம், திருநெல்வேலி, தஞ்சாவூர், ஒசூர், ஈரோடு, கோயம்புத்தூர், சிறப்புத் திட்டக் கோட்டம்–III, சேலம் மற்றும் வேலூர் ஆகிய வீட்டுவசதி வாரிய கோட்ட அலுவலகங்களுக்கு ரூ. 1.26 கோடி மதிப்பீட்டில் 14 புதிய வாகனங்கள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நிதியில் வாங்கப்படும்.

**9. தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நில ஆவணங்கள், நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் திட்டப்பணிகள் உட்பட வாரியத்தின் அனைத்துச் செயல்பாடுகளையும் மின்னணுமயமாக்கல் மற்றும் மென்பொருள் மூலம் கண்காணிக்கும் திட்டம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நில ஆவணங்களைக் மின்னணுமயமாக்கல், மேம்படுத்தப்பட்ட தகவல்களை உடனுக்குடன் இணையத்தில் பதிவேற்றம் செய்தல் ஆகியன தமிழ்நாடு வீட்வசதி வாரியத்தில் செயல்படுத்தபடவுள்ளது. மேலும் நிர்வாகம், வழக்குகள், நிதிமேலாண்மை மற்றும் ஒதுக்கீட்டாளர்களின் மனு ஆகிய வாரிய செயல்பாடுகளுக்கான இணையதளம் மற்றும் அரசின் திட்டப் பணிகளை மென்பொருள் மூலம் கண்காணித்துச் செயல்படுத்துவதற்கான திட்டம்

ரூ.3 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

மேற்காணும் மென்பொருள் மற்றும் இணையதளத்தினைப் பயன்படுத்தி தமிழ்நாடு வீட்டுவசதி வாரியச் செயல்பாடுகளைக் குறைந்த நேரம் மற்றும் செலவில் விரைந்து கண்காணித்துச் செயல்படுத்தும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம்

**10. அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள் மற்றும் குடிசைப்பகுதி மாற்றுவாரியத்திற்கு சொந்தமான இதர காலி இடங்களில் பொருளாதாரத்தில் நலிவுற்ற, குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகள் மற்றும் குடிசைப்பகுதி மாற்றுவாரியத்திற்கு சொந்தமான பகுதிகளிலுள்ள உபரி இடங்களில் 500 சதுர அடி முதல் 650 சதுர அடி பரப்புள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டு குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கு அவர்களது வாங்கும் திறனுக்கேற்ற விலையில் சந்தை விலையினை விட குறைவாக விற்கப்படும். இந்நிதியாண்டில் 1,000 குடியிருப்புகள் கட்டப்பட்டு விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 11. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023–இன் கீழ் குடிசைப்பகுதிகளற்ற நகரங்களை உருவாக்க 1.06 இலட்சம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் / வீடுகள் ரூ.4,860 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் **2023–இன்** கீழ் குடிசைப்பகுதிகளற்ற நகரங்களை உருவாக்க **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** 24,000 அடுக்குமாடிக் குடியிருப்புகள் மற்றும் 82,000 தனி வீடுகள் ரூ.4,860 கோடி செலவில் கட்டப்படும்.

**12. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் 15,948 சதுரஅடி பரப்பளவில் அலுவலர்கள் பணியாற்றுவதற்குரிய கூடுதல் அலுவலகக் கட்டடம் மற்றும் புதிய கூட்ட அறை ரூ.3.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகளின் அளவு தற்போது பல மடங்கு அதிகரித்துள்ளது. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** பல்வேறு திட்டப் பணிகளுக்காக பணியாற்றும் அலுவலர்களுக்கு உரிய அலுவலக இடம் ஏற்படுத்த 15,948 சதுர அடி பரப்பளவு கொண்ட அலுவலக இடம் மற்றும் புதிய கூட்ட அறை கொண்ட கட்டடம் ரூ 3.75 கோடி செலவில் கட்டப்படும்.

## 13. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய திருச்சிராப்பள்ளி கோட்ட அலுவலக கட்டடத்தில் கூடுதல் தளங்கள் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய திருச்சிராப்பள்ளி கோட்ட அலுவலகம், 5 மாவட்டங்களில் நகர்ப்புற குடிசை வாழ் குடும்பங்களின் மேம்பாட்டிற்காக குடியிருப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. திருச்சிராப்பள்ளி கோட்ட அலுவலகத்திற்கான நிர்வாக அலுவலகக் கட்டடத் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** தற்போதுள்ள அலுவலகத்தில் முதல் தளம் அலுவலகப் பணிக்காகவும், இரண்டாம் தளம் வணிக பயன்பாட்டுக்காகவும் ரூ.1 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 14. தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய அலுவலக பணிகளைக் கணினி மயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய அனைத்து நிர்வாக, திட்டப்பணிகளைக் கண்காணித்தல், நிதி பரிவர்த்தனை மற்றும் செயல்பாடுகளைக் கணினி மயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரிய அலுவலகத்தின் செயல்முறைகள், இணையதள அடிப்படையிலான அறிக்கை மற்றும் கண்காணிப்பு அமைப்பு, இணையதள முறையில் நிதி பரிவர்த்தனை செய்தல், குடியிருப்பினை ஒதுக்கீடு செய்தல், கிரையப்பத்திரங்கள் வழங்குதல் மற்றும் பொதுமக்களின் குறைகளை இணையதளம் மூலம் பதிவு செய்தல் ஆகிய பணிகளுக்காக கணினி மயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**15. சென்னைக்கு அருகிலுள்ள பெரும்பாக்கம் பகுதியில் உலக அளவிலான வீட்டுவசதிக் கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 1,152 குடியிருப்புகள் ரூ.121.01 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சென்னைக்கு அருகில் உள்ள பெரும்பாக்கம் பகுதியில் உலக அளவிலான வீட்டுவசதிக் கட்டுமானத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி **1,152** குடியிருப்புகள் **ரூ.121.01** கோடி செலவில் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்படும்.

# கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்

## 16. முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் ஓர் உறுப்பினருக்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை மொத்தம் ரூ.100 கோடி கடன் வழங்கப்படும்.

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களைப் புனரமைத்து கிராமப்புற அளவில் அவற்றின் உறுப்பினர்களுக்குக் கடன் விரைந்து கிடைத்திட வழிகோலும் வகையிலும், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய் ஈட்டும் பிரிவு மக்களின் கடன் தேவையை நிறைவு செய்யும் பொருட்டும் **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்க உறுப்பினர்களுக்கு ரூ.100 கோடி கடன் வழங்கப்படும். அதிகபட்சம் ஓர் உறுப்பினருக்கு ரூ.20 இலட்சம் வரை கடன் வழங்கப்படும்.

## 17. திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் 42,000 சதுர அடி பரப்பளவில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு கல்வி நிதி / கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் நிதியுதவி மூலம் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் 42,000 சதுர அடி பரப்பளவில் ரூ.5 கோடி செலவினத்தில் கூடுதல் வகுப்பறைகள் கட்டப்படும்.

## 18. திருப்பூர் மாவட்டத்தில் அமைந்துள்ள திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் ரூ.12.75 கோடி மதிப்பீட்டில் மாணவியர் விடுதி கட்டப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு கல்வி நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் நிதியுதவியுடன் திருப்பூர் குமரன் மகளிர் கல்லூரியில் **ரூ.12.75** கோடி மதிப்பீட்டில் மாணவியர் விடுதி கட்டப்படும்.

**19. முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் கடன் பெற்று கடன் தொகை முழுவதையும் சங்கத்திற்குச் செலுத்தி அசல் ஆவணங்கள் திரும்ப அளிக்கப்படாமல் உள்ள 4,548 உறுப்பினர்களுக்கு அசல் ஆவணங்கள் திரும்ப வழங்கப்படும்.**

முதன்மைக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் கடன் பெற்று கடன் தொகை முழுவதையும் திரும்பச் செலுத்தி அசல் ஆவணங்கள் திரும்ப வழங்கப்படாமல் உள்ளவர்களுக்கு, உறுப்பினர் நலன் கருதி **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** 31.05.2019 வரை 407 சங்கங்களிடமிருந்து வர வேண்டிய தொகையைப் பற்று வைத்து 4,548 உறுப்பினர்களுக்கு அசல் ஆவணங்கள் திரும்ப வழங்கப்படும். தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு இதனால் ஏற்படும் நிதி இழப்பு கலைக்கப்பட்ட கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துகளை விற்பனை செய்வதன் மூலம் ஈடு செய்யப்படும்.

# நகர் ஊரமைப்பு இயக்ககம்

**20. நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் 1,200 சதுர அடிக்கு குறைவான கட்டடத்திற்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் அனுமதி வழங்க தவறும் பட்சத்தில் தானாகவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் எல்லைக்குட்பட்ட பகுதியில் 1,200 சதுர அடிக்கு குறைவான கட்டடத்திற்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் அனுமதி வழங்க தவறும் பட்சத்தில் தானாகவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதாக கருதப்படும்.

**21. நகர் ஊரமைப்புத் துறையின் திட்டக் குழும / மண்டல அலுவலகங்களை மறுசீரமைத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனி அலுவலகம் மொத்தமாக ரூ.2.31கோடி செலவில் ஏற்படுத்தப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** நகர் ஊரமைப்புத் துறையின் திட்டக்குழும / மண்டல அலுவலகங்களை மறுசீரமைத்து ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனி அலுவலகம் மொத்தமாக ரூ.2.31 கோடி செலவில் ஏற்படுத்தப்படும். அது மாவட்டத்தின் திட்டப்பகுதி மற்றும் திட்டமில்லா பகுதிகளை உள்ளடக்கியிருக்கும்.

## 22. பொதுமக்கள் பயன்பெற ஏதுவாக அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட அனுமதி விவரங்கள் நகர் ஊரமைப்புத் துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** பொதுமக்கள் பயன்பெற ஏதுவாக அங்கீகரிக்கப்பட்ட மனைப்பிரிவுகள் மற்றும் கட்டட அனுமதி விவரங்கள் நகர் ஊரமைப்புத் துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்படும்.

**23. நகர் ஊரமைப்புத் துறையின் தலைமை அலுவலகத்திற்கு இரண்டு வாகனங்கள், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட அலுவலகங்களுக்கு தலா ஒரு வாகனம், ஆக மொத்தம் 4 வாகனங்கள் அலுவலக பயன்பாட்டிற்கென ரூ.26 இலட்சம் செலவில் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** தலைமை அலுவலகத்திற்கு இரண்டு வாகனங்கள், காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்ட அலுவலகங்களுக்கு தலா ஒரு வாகனம், ஆக மொத்தம் 4 வாகனங்கள் அலுவலக பயன்பாட்டிற்கென ரூ.26 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

## 24. மலையிடப் பாதுகாப்புக் குழுமப் பகுதிகளில் திட்ட அனுமதி விரைவாக வழங்கும் வகையில் ஒப்புதல் அளிக்கும் நடைமுறைகள் எளிமையாக்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** மலையிடப் பாதுகாப்புக் குழுமப் பகுதிகளில் திட்ட அனுமதி விரைவாக வழங்கும் வகையில் ஒப்புதல் அளிக்கும் நடைமுறைகள் எளிமையாக்கப்படும்.

## 25. பொதுமக்கள் மனைப்பிரிவு மற்றும் கட்டட அனுமதி தொடர்பான விதிமுறைகள் குறித்த ஆலோசனைகளைப் பெற ஏதுவாக நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் அனைத்து சார்நிலை அலுவலகங்களிலும் தகவல் மற்றும் ஆலோசனை மையம் ஏற்படுத்தப்படும்.

மனைப்பிரிவு மற்றும் கட்டட அனுமதி தொடர்பான விதிமுறைகள் குறித்த ஆலோசனைகளைப் பொதுமக்கள் பெற ஏதுவாக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** நகர் ஊரமைப்பு துறை இயக்குநர் அலுவலகம் மற்றும் அனைத்து சார்நிலை அலுவலகங்களிலும் தகவல் மற்றும் ஆலோசனை மையம் ஏற்படுத்தப்படும்.

# சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**26. புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து முனையம் (முன்னர் சென்னை புறநகர் பேருந்து நிலையம்) மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து முனையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேம்படுத்த ரூ.2.25 கோடி செலவில் முகம் அடையாளம் காட்டும் கேமராக்கள் பொருத்தப்படும்.**

புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் பேருந்து முனையம் (முன்னர் சென்னை புறநகர் பேருந்து நிலையம்) மற்றும் மாதவரம் புறநகர் பேருந்து முனையம் ஆகியவற்றில் கண்காணிப்பை மேம்படுத்த **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** பேருந்து முனையங்களில் குற்ற நடவடிக்கைகளைத் தடுக்கும் பொருட்டும், ஏற்கனவே உள்ள கேமராக்களின் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் ரூ.2.25 கோடி செலவில் முகம் அடையாளம் காட்டும் கேமராக்கள் பொருத்தப்படும்.

**27. 2006 முதல் 2014–ஆம் ஆண்டு வரையிலான கட்டட அனுமதி வரைபடங்கள் மற்றும் 2000–ஆம் ஆண்டு முதலான மனைப்பிரிவு வரைபடங்கள் மின்னணுமயமாக்கப் பட்டுள்ளதினைத் தொடர்ந்து அதற்கு முந்தைய எல்லா வரைபடங்களும் மின்னணு மயமாக்கப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** 2006 முதல் **2014–**ஆம் ஆண்டு வரையிலான கட்டட அனுமதி வரைபடங்கள் மற்றும் **2000–**ஆம் ஆண்டு முதலான மனைப்பிரிவு வரைபடங்கள் மின்னணு மயமாக்கப்பட்டுள்ளன. அதற்கு முந்தைய எல்லா வரைபடங்களும் மின்னணுமயமாக்கப்படும்.

**28. கள ஆய்வின் போது அதிகாரிகள் அளவீடுகளைத் துல்லியமாக மேற்கொள்ள வசதியாக நவீன லேசர் முறை சார்ந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** கள ஆய்வின் போது அதிகாரிகள் அளவீடுகளைத் துல்லியமாக மேற்கொள்ள வசதியாக நவீன லேசர் முறை சார்ந்த உபகரணங்கள் கொள்முதல் செய்யப்படும்.

**29. திட்ட அனுமதி வழங்கும் போது அமைவிடத்தைத் துல்லியமாக அறியவும், விதியிலிருந்து விலகிய பகுதிகளைக் கண்டறியவும், வரைபடங்களில் புவிசார் நிலைப்படுத்துதல் முறை, ஆயத் தொலைவுகளைக் குறிப்பிடும் முறை நடைமுறைப்படுத்தப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** திட்ட அனுமதி வழங்கும் போது அமைவிடத்தை துல்லியமாக அறியவும், விதியிலிருந்து விலகிய பகுதிகளைக் கண்டறியவும், வரைபடங்களில் புவிசார் நிலைப்படுத்துதல் முறை, ஆயத் தொலைவுகளையும் குறிப்பிடும்முறை நடைமுறைப்படுத்தப்படும்.

## 30. சென்னை நகரில் மண் தன்மை குறித்த தகவல் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு நிகழ்நிலையில் பதிவேற்றப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சென்னை நகரில் மண் தன்மை குறித்த தகவல் சம்பந்தப்பட்ட துறைகளிலிருந்து சேகரிக்கப்பட்டு நிகழ்நிலையில் பதிவேற்றப்படும்.

## 31. கோயம்பேட்டிலுள்ள மலர் அங்காடிக்கு கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள 3 ஏக்கர் பரப்பளவில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் நவீன மலர் அங்காடி விரிவுபடுத்தப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** கோயம்பேட்டிலுள்ள மலர் அங்காடிக்கு கிழக்குப்பகுதியில் அமைந்துள்ள 3 ஏக்கர் பரப்பளவில் ரூ.40 கோடி மதிப்பீட்டில் நவீன மலர் அங்காடி விரிவுபடுத்தப்படும்.

## 32. கோயம்பேடு அங்காடிகளில் பணியாற்றிவரும் தினக்கூலி பணியாளர்களின் வசதிக்காக கழிப்பிட வசதியுடன் கூடிய தங்கும் விடுதி ரூ. 2 கோடி செலவில் கட்டப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** கோயம்பேடு அங்காடிகளில் பணியாற்றிவரும் தினக்கூலி பணியாளர்களின் வசதிக்காக கழிப்பிட வசதியுடன் கூடிய தங்கும் விடுதி ரூ. 2 கோடி செலவில் கட்டப்படும்.

**33. வேளச்சேரி துரித இரயில் நிலையத்தில், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கான பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் ரூ.80 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் நிறுவப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** வேளச்சேரி துரித இரயில் நிலையத்தில், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்களுக்கான பல அடுக்கு வாகன நிறுத்துமிடம் ரூ.80 கோடி மதிப்பீட்டில் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் நிறுவப்படும்.

## 34. திருமழிசை குத்தம்பாக்கம் கிராமத்தில் 20 ஏக்கர் பரப்பளவில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** திருமழிசை குத்தம்பாக்கம் கிராமத்தில் 20 ஏக்கர் பரப்பளவில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் பேருந்து நிலையம் அமைக்கப்படும்.

## 35. காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகர் புதுநகரில் சமுதாயக்கூடம் ரூ.4 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்யப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகர் புதுநகரில் சமுதாயக்கூடம் ரூ.4 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்யப்படும்.

## 36. சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தினுள் முதல்வர் இல்லமாக அமைந்திருக்கும் புராதனக் கட்டடம் புனரமைக்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சென்னை மாநிலக் கல்லூரி வளாகத்தினுள் முதல்வர் இல்லமாக அமைந்திருக்கும் புராதனக் கட்டடத்தினை புனரமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 37. சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திலுள்ள 59 காலி பணியிடங்கள் (உதவி திட்டஅமைப்பாளர்–17, திட்ட உதவியாளர் நிலை.I– 15, திட்ட உதவியாளர் நிலை.II– 27) உடனடியாக நிரப்பப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திலுள்ள 59 காலி பணியிடங்கள் (உதவி திட்ட அமைப்பாளர்–17, திட்ட உதவியாளர் நிலை.I– 15, திட்ட உதவியாளர் நிலை.II – 27) உடனடியாக நிரப்பப்படும்.

## 38. திட்ட அனுமதி விண்ணப்பங்கள் மற்றும் பணி நிறைவுச் சான்றிதழ் போன்றவை காகித பயன்பாடில்லாமல் நிகழ்நிலை மூலம் வழங்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** திட்ட அனுமதி விண்ணப்பங்கள் மற்றும் பணி நிறைவுச் சான்றிதழ் போன்றவை காகித பயன்பாடில்லாமல் நிகழ்நிலை மூலம் வழங்க ஏதுவாக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் ஒற்றைச் சாளர இணையத்தை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**39. சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பகுதியில் 1,200 சதுர அடிக்கு குறைவான கட்டடத்திற்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் அனுமதி வழங்க தவறும் பட்சத்தில் தானாகவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடனும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படியும்,** சென்னைப் பெருநகர வளர்ச்சிப் பகுதியில் **1,200** சதுர அடிக்கு குறைவான கட்டடத்திற்கு அனுமதி கோரி பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு 30 நாட்களுக்குள் அனுமதி வழங்க தவறும் பட்சத்தில் தானாகவே திட்ட அனுமதி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

**ஓ. பன்னீர்செல்வம்**
துணை முதலமைச்சர்